# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

(அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./SPR / 9/1–5,  13–12–2006 நாளிட்டது)

(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)

பொருள் – த.மி.ஒ.ஆ – மின் பகிர்மானச் செயல்திறச் செந்தரங்கள் ஒழுங்குமுறைவிதிகள்

---

(1) ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 57ஆம் பிரிவின்படி தமிழ்நாடு மின் பகிர்மான செயல்திறச் செந்தரங்கள் ஒழுங்குமுறைவிதிகளை குறித்துரைத்துள்ளது. இந்த ஒழுங்குமுறைவிதிகள் 01–09–2004 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. அந்த நாளிலிருந்து 21ஆம் மற்றும் 22ஆம் ஒழுங்குமுறைவிதிகள் தவிர, அனைத்து ஒழுங்குமுறைவிதிகளும் நடைமுறைக்கு வரும்.

(2) 21ஆம் ஒழுங்குமுறைவிதி, செயல்திறங்களை அடைவதற்குத் தவறுவதற்காக உரிமம்தாரர்களால் செலுத்தப்படவேண்டிய நஷ்டஈட்டை வகுத்துரைக்கிறது மற்றும் 22ஆம் ஒழுங்குமுறைவிதி அவ்வாறு நஷ்டஈடு செலுத்துவதற்கான நடைமுறையை வகுத்துரைக்கிறது.

(3) தமிழ்நாடு மின்சார வாரியம் செந்தரங்களைப் பூர்த்தி செய்வதற்குரிய தேவையுடன் தம்மைத் தயார் செய்வதற்கும் மற்றும் புதிய சூழ்நிலைக்கு தம்முடைய பணியாளர்களின் மனநிலையையும், அவர்களுடைய அணுகுமுறையையும் மாற்றுவதற்கு அதற்குத் தேவைப்படலாகும் காலத்தைப் பரிசீலனை செய்தல், 21ஆம் ஒழுங்குமுறைவிதியின்படியான வகைமுறை 1 (iii)ஆம் ஒழுங்குமுறைவிதியில் குறித்துரைக்கப்பட்டுள்ளது. அந்த ஒழுங்குமுறைவிதி அரசிதழில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 1 வருடத்திற்குப் பின்பு நடைமுறைக்கு வரும். இவ்வாறாக, தமிழ்நாடு மின்சார செயல்திறச் செந்தரங்கள் ஒழுங்குமுறைவிதிகளின் 21ஆம் மற்றும் 22ஆம் ஒழுங்குமுறைவிதிகளின்படியான வகைமுறைகள் 01–09–2005 முதற்கொண்டு நடைமுறைக்கு வந்துள்ளது.

(4) தமிழ்நாடு மின்சார வாரியம், போதிய அளவு பணியாளர் மற்றும் மூலப் பொருள் இல்லாமல் இயங்கி வருகிறது என்றும் ஆணையத்தினால் வகுத்துரைக்கப்பட்ட பல்வேறு செந்தரங்களை நிறைவேற்றுவதற்கு அதற்கு இடர்ப்பாடு உள்ளது

என்றம் தனது கோரிக்கையை எடுத்துரைத்தது. அதனைப் பூர்த்தி செய்வதற்கு உரிமம்தாரர் தவறும் நேர்வில், போதிய அளவு பணியாளர் மற்றும் மூலப்பொருள் இல்லாமையை சரி செய்வதற்கும் மற்றும் பணியாளர்களின் மனநிலையை மாற்றுவதற்கும் நஷ்டஈடு செலுத்தப்படவேண்டியது இரண்டாண்டுகளுக்கு ஒத்தி போடப்படலாம். தமிழ்நாடு மின்சார வாரியம், செயல்திறச் செந்தரங்களை அடைவதற்குத் தன்னால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி ஆணையத்தின் முன்பும் கூட அறிக்கை தாக்கல் செய்துள்ளது.

(5) ஆணையம், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கோரிக்கையை பரிசீலனை செய்து, செந்தரங்கள் முதலியவற்றை அடைவதற்கான மைல்கல்லாக நடவடிக்கைத் திட்டத்தினை அனுப்ப வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு 1ஆம் ஒழுங்குமுறைவிதியின் (iii)ஆம் கூறில் குறித்துரைக்கப்பட்ட கால அளவை ஒன்பது மாதங்களுக்கு நீட்டிப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளது, எனவே, 21ஆம் மற்றும் 22ஆம் ஒழுங்குமுறைவிதிகளின் வகைமுறையானது 01–06–2006 முதற்கொண்டு நடைமுறைக்கு வரும். மற்றும் 31–05–2006 வரையில் செந்தரங்களைப் பூர்த்தி செய்யத் தவறியதற்காக நஷ்டஈடு செலுத்தப்படவேண்டியது ஒத்திப் போடப்பட்டது 31–08–2005 அன்று அறிவிக்கைச் செய்யப்பட்டுள்ளது.

(6) மேலும், தமிழ்நாடு மின்சார வாரியம், 26–05–2006 நாளிட்ட தன்னுடையக் கடிதத்தில் மேற்கொண்டும், இருந்துவரும் உள்ளமைப்புப் பணிகளுக்கு அதிக அளவிலான வளர்ச்சி எதிர்பார்பதற்கு மேலாக அதிக சுமை கூடியுள்ளது, சுனாமி, வெள்ளம் மற்றும் கடுங்கோடைக்காலங்கள் ஆகிய இயற்கைப் பேரிடர்களைச் சமாளிக்க வேண்டியுள்ளது போன்ற இடர்ப்பாடுகளைச் சுட்டிக்காட்டி செயற்படுத்தும் இயங்குமுறை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒத்தி போடப்படலாம் என்று மீண்டும் கோரியுள்ளது.

(7) ஆணையம், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கோரிக்கையைப் பரிசீலனை செய்து, முன்னேற்றம் குறித்த அறிக்கையை மாதாந்திரமாக அளித்தல் வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு, 1ஆம் ஒழுங்குமுறைவிதியின் (iii) ஆம் கூறில் குறித்துரைக்கப்பட்ட காலஅளவினை ஆறு மாதங்கள் நீட்டிப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளது எனவே 21ஆம் மற்றும் 22ஆம் ஒழுங்குமுறைவிதிகளின்

வகைமுறையானது 01–12–2006 முதற்கொண்டு நடைமுறைக்கு வரும் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம், 01–12–2006 லிருந்து செந்தரங்களைப் பூர்த்தி செய்வதற்காகத் தன்னை தயார் படுத்திக் கொள்ள வேண்டும் மற்றும் 30–11–2006 வரையில் செந்தரங்களைப் பூர்த்தி செய்யத் தவறுவதற்காக நஷ்டஈடு செலுத்தப்பட வேண்டியது ஒத்திப்போடப்பட்டது 31–05–2006 அன்று அறிவிக்கைச் செய்யப்பட்டுள்ளது.

(8) தற்போது, தமிழ்நாடு மின்சார வாரியம், தன்னடைய 07–11–2006 நாளிட்ட கடிதத்தில் பின்வருவனவற்றை கூறியுள்ளது :–

(1) தமிழ்நாடு மின்சார வாரியத்தில், அனைத்துத் தொடக்கநிலையிலுள்ள பதவியிடங்களின் வகைகளில் அதிக அளவு எண்ணிக்கையில் காலியிடங்கள் உள்ளன. இதில் அரசுக் கொள்கை முடிவு உள்ளடங்கியுள்ளதால், அந்தப் பதவியிடங்களை நிரப்புவதற்குக் குறைந்தது ஆறு மாதங்கள் ஆகும்.

(2) நுகர்வோருக்கு தடை எதுவும் இல்லாமல் கிடைக்கக்கூடியதான 110 KV / 230 KV மின் தொடர்களின் மின்னூட்ட நீக்கம் கிடைக்கக்கூடியதன் அடிப்படையில், மேம்பாட்டுப் பணி /புதிய பணி முதலியவற்றை திட்டமிட்டவாறு செய்யமுடியவில்லை.

(3) மின் தொடர்களை இடுவதற்காக புதியதாகப் போடப்பட்ட சாலைகளை வெட்டுவது வெகு காலம் ஆகும், ஏனெனில், ஓர் ஆண்டுக் காலத்திற்கு பின்பு மட்டுமே சாலையை வெட்டுவதற்காக ஒப்புதல் வழங்கப்படும்.

(4) நிலம் கையகப்படுத்துதல், வழி அனுமதி, நீதிமன்ற வழக்கு, மற்றும் பிற துணை மின் நிலையச் சாதனம் ஆகியவற்றைப் பொறுத்து பெருமளவில் உள்ளமைப்புத் தடை உள்ளது.

எனவே, செந்தரங்களைப் பூர்த்தி செய்யத் தவறுவதற்காக நஷ்டஈடு செலுத்தப்படவேண்டியது 30–11–2006 லிருந்து மேலும் ஓர் ஆண்டிற்கு ஒத்தி போடப்படலாம்.

(9) ஆணையத்தின் உத்தரவுகளின் அடிப்படையில், தமிழ்நாடு மின்சார வாரியம், செந்தரங்களைச் செயல்படுத்துவதற்கு அதனால் எதிர் நோக்கப்படவேண்டிய இடர்ப்பாடுகளைப் பற்றி விளக்கி 04–12–2006 அன்று ஒரு மனுவைத் தாக்கல்

செய்துள்ளது.

(10) இந்தச் சூழ்நிலையில், ஆணையத்தினால் பின்வருவன பரிசீலனை செய்யப்பட்டுள்ளது :—

(a) தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் கூறப்படும் இடர்ப்பாடுகள் மற்றும் தடைகள் தொடர்ச்சியானது மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம், செந்தரங்களைப் பூர்த்தி செய்யத்தவறியதற்காக அதே ஆதாரத்தின் பேரில் நஷ்டஈடு செலுத்தப்படவேண்டியது ஒத்திபோடுவதற்கான கோரிக்கை மீண்டும் கோருதல் ஆகாது. ஆணையம், அவர்களுடைய இடர்ப்பாடுகளை நீக்குவதற்காகவும் ஒழுங்குமுறைவிதிகளின்படி செந்தரங்களைப் பூர்த்தி செய்யத் தவறுவதற்காக நஷ்டஈடு செலுத்தத்தக்கதை நிறைவேற்றுவதற்குப் போதுமான கால அவகாசம் வழங்கியுள்ளது.

(b) ஆணையம், தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் வெளிப்படுத்தப்படும் உண்மையான இடர்ப்பாடுகளை கவனத்தில் எடுத்துக் கொண்டு ஒழுங்குமுறைவிதிகளைத் திருத்தம் செய்துள்ளது. மேலும், ஆணையம், தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் வெளியிடப்பட்டவாறான களப்பணியிலான இடர்ப்பாடுகளின் அடிப்படையில் 04–12–2006 அன்று நடைபெற்ற கூட்டத்தின்போது உத்தேசிக்கப்பட்ட திருத்தங்களை கொள்கையளவில் ஒன்றாகச் சேர்ப்பதற்கு ஒத்துக் கொண்டுள்ளது. எனவே, தமிழ்நாடு மின்சார வாரியம், தற்போது ஒழுங்குமுறைவிதியை, கடித வாயிலாகவும், மெய்ப்பொருள் வாயிலாகவும் நிறைவேற்றுவதில் நல்ல நிலையில் இருக்கிறது.

(c) மேலும், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் காண்திறன் அறிக்கை, ''போட்டி வீதங்களில் மின்சக்தியின் தரம் மற்றும் நம்பகத் தன்மையில் கிடைக்கும் திறனுடன்'' தமிழ்நாடு மின்சார வாரியத்துடன் இணைக்கப்பட்டதைச் சிந்திக்கச் செய்கிறது, தரம் மற்றும் நம்பகமான மின் சக்தியை உறுதிப்படுத்துகிறது, சந்தேகத்திற்கிடமின்றி, தமிழ்நாடு மின்சார வாரியம், கடித வாயிலாகவும், மெய்பொருள் வாயிலாகவும் மின் பகிர்வு செயல்திறச் செந்தரத்தின் வகைமுறைகள் அனைத்தையும் நிறைவேற்றுவதற்கு சாத்தியமான முயற்சி செய்தல் வேண்டும்.

(d) தமிழ்நாடு மின்சர வாரியம் தன்னுடைய இணக்க அறிக்கையின்படி

தொடர்ச்சியான கடைசி இரண்டு ஆண்டுகளில் ஒழுங்குமுறைவிதிகளில் ஆணையத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டதைவிட சரியான ‘‘ செயல்திறஅளவு’’ சாதனை செய்துள்ளது மற்றும் முந்திய ஆண்டைவிட நடப்பு ஆண்டில் அதிக அளவில் மேம்பாட்டினைக் காட்டுவது முக்கியமானதாகும். செயல்திற அளவு மிகவும் முக்கியமான அளவுரு மற்றும் இந்தச் சூழ்நிலையில் தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் செய்யப்பட்ட சாதனைகள், ஒழுங்குமுறைவிதியின்படி தேவையான செந்தரங்களை நிறைவேற்றுவதற்கான காலம் கனிந்துள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ளது.

(e) மின் பகிர்வு செயல்திறச் செந்தரங்கள் ஒழுங்குமுறைவிதிகள் **01–09–2004** அன்று அறிவிக்கைச் செய்யப்பட்டது மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் அனைவரின் நலனைப் பாதுகாப்பதில் நியாயமான பங்கு வகித்து மின் பகிர்வு உரிமம்தாரரால் நிறைவேற்றப்படுவதை பார்வையிடுவது ஆணையத்தின் தலையானப் பணியாகும். எனவே, சாத்தியமான இடத்தெல்லாம் நிறைவேற்றுகை முழு அளவில் செயற்படுத்தினாலன்றி, மின்பகிர்வு செந்தரம் எப்போதும் உண்மையானதாகும் என்பது ஆணையத்தின் கருத்தாகும்.

(f) பிரச்சனைகள்வாரியாக, மேற்சொன்ன கூட்டங்களின் போது தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அலுவலர்களுடன் விவரமாக கலந்து விவாதம் செய்து, தேவையான செந்தரங்களை பூர்த்தி செய்யத் தவறியதற்காக நஷ்டஈடு செலுத்தப்படவேண்டியது பெரும்பாலான நேர்வுகளில் **01–01–2007**லிருந்து நிறைவேற்றப்பட்டுள்ளது என்பது தெரியவந்துள்ளது.

(g) ஒருசில நேர்வுகளைப் பொறுத்தவரை, தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் வெளிப்படுத்தப்பட்டவாறு உண்மையான நேரத்தில் களப்பணி இடர்ப்பாடுகளின் அடிப்படையில், **01–07–2007**லிருந்து அந்த ஒருசில நேர்வுகளில், நிச்சயமாக செந்தரங்களைப் பூர்த்தி செய்வதற்கு தன்மைத் தயார் செய்வது என்ற நிபந்தனைக்கு உட்பட்டு ஏழு மாதங்களுக்கு விலக்களிப்பு வழங்கப் பரிசீலிக்கப்படலாம்.

**(11)** மேற்சொன்னவற்றை பரிசீலித்து ஆணையம் பின்வருமாறு ஆணையிட்டுள்ளது:–

(i) தமிழ்நாடு செயல்திறச் செந்தரங்கள் ஒழுங்குமுறைவிதிகளின் **21**ஆம் மற்றும் **22**ஆம் ஒழுங்குமுறைவிதிகளின் வகைமுறையின் நிறைவேற்றுகை பின்வரும்

மின்னிணைப்புப் பகுதிகள் பொறுத்து 01–01–2007 முதற்கொண்டு நடைமுறைக்கு வரும், –

21ஆம் ஒழுங்குமுறைவிதியின் அட்டவணை வ.எண். 1 :

(a) புதிய மின்னிணைப்பு.

(b) கூடுதல் சுமை.

(c) தற்காலிக மின் வழங்கல்.

(d) மின்னிணைப்பினை இடம் மாற்றுதல்.

(e) மின்னிணைப்பு உரிமை மாற்றுதல்.

(f) மின் கட்டணத்தை மாற்றுதல்.

இவற்றின் கோரிக்கையின் பேரில் மின் வழங்குவதற்கான கடமை.

| | | |
|---|---|---|
| 21ஆம் ஒழுங்குமுறைவிதியின் அட்டவணையின் வ.எண். 2 | : | பட்டியலிடலிலுள்ள முறையீடுகள் |
| 21ஆம் ஒழுங்குமுறைவிதியின் அட்டவணையின் வ.எண். 3 | : | மின் அளவிகளை மாற்றுதல் |
| 21ஆம் ஒழுங்குமுறைவிதியின் அட்டவணையின் வ.எண். 6 | : | நுகர்வோரின் முறையீடுகளுக்குப் பதிலுரையளித்தல் |
| 21ஆம் ஒழுங்குமுறைவிதியின் அட்டவணையின் வ.எண். 7 | : | நியமனங்கள் செய்தல் மற்றும் பேணி வருதல் |
| 21ஆம் ஒழுங்குமுறைவிதியின் அட்டவணையின் வ.எண். 8 | : | குறைகளைக் கையாளுதல் |

எனினும், 4ஆம் ஒழுங்குமுறைவிதியைப் பொறுத்து, பின்வரும் **அட்டவணை I** மற்றும் **II** இன் இனங்களுக்கு மட்டுமே பொருந்தத்தக்க தமிழ்நாடு மின் பகிர்வு செயல்திறச் செந்தரங்கள் ஒழுங்குமுறைவிதிகளின் 21ஆம் மற்றும் 22ஆம் ஒழுங்குமுறைவிதிகளின் வகைமுறைகளை நிறைவேற்றுதல் (கோரிக்கையின் பேரில் மின் வழங்கல் செய்வது உரிமம்தாரரின் கடமைகளாகும்) : அதாவது :–

| | | |
|---|---|---|
| அட்டவணை I | இனம் (a) | நீட்டிப்பு அல்லது மேம்பாட்டு பணி எதனையும் உள்ளடக்காதவை |
| அட்டவணை II | இனம் (a) | நீட்டிப்பு மற்றும் மேம்பாட்டு பணியை உள்ளக்கியது. |

மற்றும்

(ii) பின்வரும் மின்னிணைப்புப் பகுதிகள் பொறுத்து தமிழ்நாடு மின் பகிர்வு செயல்திறச் செந்தரங்கள் ஒழுங்குமுறைவிதிகளின் 21ஆம் மற்றும் 22ஆம் ஒழுங்குமுறைவிதிகளின் வகைமுறையின் நிறைவேற்றத்திற்காக 30–06–2007 வரை ஒத்தி போடுதல்.

| | | |
|---|---|---|
| 21ஆம் ஒழுங்குமுறைவிதியின் அட்டவணையின் வ.எண். 4 | : | மின் வழங்கல் தடை |
| 21ஆம் ஒழுங்குமுறைவிதியின் அட்டவணையின் வ.எண். 5 | : | மின் அழுத்த அலைவுகள் மற்றும் முறையீடுகள் |

எனினும், 4ஆம் ஒழுங்குமுறைவிதி பொறுத்து, **அட்டவணை I** மற்றும் **II** இன் பின்வரும் இனங்களுக்கு மட்டுமே 30–06–2007 வரை விலக்களிப்பு வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அட்டவணை I | இனம் (b) | மின் மாற்றிகள் இல்லாமல் நீட்டிப்பு மற்றும் மேம்பாடு உள்ளடங்கியது |
| அட்டவணை I | இனம் (c) | மின்மாற்றிகளுடன் நீட்டிப்பு மற்றும் மேம்பாடு உள்ளடங்கியது |
| அட்டவணை II | இனம் (b) | திறன் மின்மாற்றியின் திறனை அதிகரித்தல் / கூடுதல் திறன் மின்மாற்றி உள்ளடங்கியது |
| அட்டவணை II | இனம் (c) | புதிய துணை மின் நிலையத்தினை தொடங்குதல் உள்ளடங்கியது. |

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

செயலாளருக்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்